# திருக்குறளில் மன அளவிலான மென்மையியல்

3

முனைவர் க.சுஜாதா
உதவிப்பேராசிரியர் &தமிழாய்வுத்துறை
புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி -620 002

**ஆய்வுச் சுருக்கம்**

மன அளவிலான மென்மையியல் என்பது மனதில் நல்ல பண்புகள் வளர்த்தல் மற்றும் மனதின் ஆரோக்கியத்தை பாதுகாத்தல் குறித்த ஒரு முக்கிய துறையாகும். இது தனிநபர் வாழ்க்கையில் மனச்சாந்திஇ மனநலம் மற்றும் மன சுறுசுறுப்பை நிலைநிறுத்த உதவுகிறது.மன அளவிலான மென்மையியல் தனிநபர் மனதில் உருவாகக்கூடிய உளவியல் சிக்கல்களையும்இ அவை ஏற்படுத்தும் விளைவுகளையும் குறைப்பதில் மையமாக உள்ளது. இதன் முக்கியத்துவம் அனைவருக்கும் சமச்சீரான மனநிலையை உருவாக்குவதிலும்இ சமூகத்தின் நலனில் பங்களிப்பை மேம்படுத்துவதிலும் உள்ளது.

முன்னுரை

மனித வாழ்வின் விளைநிலம் மனம். மனத்தை இதமாக நடத்தக்கூடிய ஆற்றல் பெற்றவனே மனிதன். மனதிலிருந்து எண்ணம் எண்ணத்திலிருந்து சொல் சொல்லிலிருந்து செயல் என்ற அடிப்படையில் எண்ணம், சொல், செயல் என முத்தொழில்களும் பிறக்கின்றன.

“உணர்வ ஒழுக்கம் இல்லார் பால்
அறிவு ஒழுக்கம் இல்லை
அறிவு ஒழுக்கம் இல்லார் பால்
ஆன்ம ஒழுக்கம் இல்லை”

என்பது தமிழ்ச் சித்தர்கள் கண்ட முடிவு. ஆன்ம ஒழுக்கத்தின் அடித்தளமே மனத்தை இயக்கி பின்பற்றப்படும் ஒழுக்கமுறையாகும.; மனம் பிறழ்ந்தால் ஒழுக்கமும் பிறழ்ந்த நிலையே அமையும்.; மனம் என்ற சொல் வள்ளுவரால் இருபது இடங்களில் கையாளப்பட்டு இருப்பதை காணமுடிகின்றது. அதாவது காமத்துப் பாலில் மனம் என்ற சொல் இல்லை. அறத்துப்பால், பொருட்பால் என 108 அதிகாரங்களில் 20 இடங்களில்

மனம் என்ற சொல் பயின்று வருகின்றது. சிற்றினம் சேராமை என்ற ஒரே அதிகாரத்தில் ஏழு இடங்களிலும் மனத்தோடு பொருந்தாதவர்களோடு நட்பு கொள்ளக்கூடாது என்ற நிலையில் கூடா நட்பு என்ற அதிகாரத்தில் மூன்று குறள்களிலும் புறநிலையில் ஒழுக்கம் உடையவர் போன்று அக நிலையில் தாழ்ந்த பண்புடையாளர்களோடு இணையக்கூடாது என்ற நிலையில் கூடா ஒழுக்கம் என்ற அதிகாரத்தில் இரண்டு குறள்களிலும் நம்முடனே சேர்ந்து கொண்டு நமக்கு எதிராக செயல்படும் உள்பகை உடையவர்களிடம் நட்புக் கூடாது என்பதற்காக உட்பகை என்ற அதிகாரத்தில் ஒரு குறளிலும் எல்லைக் கடந்து பழகும் மகளிராகிய வரைவின் மகளிர் என்று அதிகாரத்தில் ஒரு குறளிலும் என 20 இடங்களில் மனம் என்ற சொல்லை வெகு அழகாக எடுத்தாண்டுள்ளார்.

**கலைச்சொற்கள்**

1.தன்னிலை உணர்வு -நபரின் சிந்தனை

2. நேர் மனநிலை -வாழ்க்கையை நேர்மறையாக அணுகும் மனப்போக்கு.

3.மன உறுதி - சிக்கல்களைக் கடக்க மன உறுதியான மனநிலை.

4. உளச்சிக்கல் - நடத்தை கோளாறுகள்

**சிற்றினம் சேராமையில் மனம்**

சிற்றினம் என்பது தாழ்ந்த பண்புடையவர்களைக் குறிக்கின்றது. சிற்றின்பத்தையே பெரிதும் விரும்பும் தீய ஒழுக்கம் உடையவர்கள் மனதில் வஞ்சனை உடையோர் சூழ்நிலைக்குத் தக்கவாறு கூத்தாடுகின்ற கூத்தர் போன்ற பண்புடையவர்களை சிற்றினத்தவர் என்கின்றார் வள்ளுவர். அறிவைத் திரித்து இருமையும் கெடுக்கும் இயல்பிற்றாயத் தன்மை என்று சிற்றினம் என்ற சொல்லுக்கு பரிமேலழகர் விளக்கம் அளிக்கிறார இத்தகைய சிற்றினத்தாரோடு சேர்ந்தால் மனம் கீழ்மை அடையும்அதற்காகவே சிற்றினம் சேராமையில் ஏழு இடங்களில் மனம் என்ற சொல்லை தருகின்றார்.

**மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம் (குறள் 457)**

இங்கு ஆக்கம் என்பது உயிரின் வாழ்நாளை நீடிக்கும் ஆற்றல் உடையது மனம் என்பது பொருள் மனம் உள்ளவர்கள் நீண்ட நாள் வாழ்பவர்கள் என்பதில் ஐயம் இல்லை. அதனை வாழ்க்கை அனுபவத்தில் காண முடிகின்றது அத்துடன் மனநலம் உடையவர்களுக்குத் தான் நல்ல பண்புடைய சிறந்த குழந்தைகள் பிறக்கும் என்பது வள்ளுவர் கருத்து இதனை.

**மனம் தூயார்க்கு எச்சம் நன்றாகும் (குறள் 456)**

என்ற குறளில் குறிப்பிடுகின்றார் மேலும் வாழ்க்கையில் நம்முடைய அறிவு மனத்தின் அடிப்படையில் தான் தோன்றும்.

**மனம் தானாம் மாந்தர்க்கு உணர்ச்சி (குறள் 453)**

மனம் அழுக்கின்றி தூய்மையாக இருந்தால் நீண்ட நாள் வாழ்வதோடு மறுமையும் கிடைக்கும் என்பார் வள்ளுவர்

**மனநலத்தின் ஆகும் மறுமை (குறள் 459)**

இதனை அனைத்திற்கும் அடிப்படையாக அமைவது நல்ல பண்புடையார்களோடு சேர்தல். சேர்ந்த தினத்திற்கு தக்க மனத்தூய்மையும் அறிவும் அமையும்.

**மனத்து எது போல காட்டி ஒருவருக்கு**

**இனத்துள தாகும் அறிவு (குறள் 454)**

மனத்தின் தூய்மையும் நாம் செய்கின்ற செயல்களின் தூய்மையும் நாம் சேருகின்ற இனத்தின் தூய்மையால் வரும்

மனத்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்

இனத்தூய்மை தூவா வரும் (குறள்; 458)

இயல்பாக மனம் நல்லதாக இருந்தாலும் நல்லவர்களோடு சேரும்போது இன்னும் சிறப்பும் பெருமையும் பெறுகிறது.

**மனநலம் நன்குடையார் ஆயினும் சான்றோர்க்கு**

**இனநலம் ஏமாப்பு உடைத்து (குறள் 458)**

இவ்வாறு நல்ல மனத்தால் விளையும் விளைவுகளை வள்ளுவர் பட்டியலிட்டு மனத்தின் செயலையும் மனத்தூய்மையின் அவசியத்தையும் கூறியுள்ளார் மனமே ஐம்பொருள்களை இயக்குகின்றது மனதை இதமாக இயக்கத் தெரிந்தவன் மனிதன் மனமே ஒரு மனிதனின் எண்ணம் சொல் செயல் அனைத்திற்கும் அடிப்படையாக அமைகின்றது மனத்தின் தன்மைக்கேற்ப நட்பு நிலையும், வாழ்க்கை நிலையும் அமைகிறது மனத்தின் தன்மைக்கேற்ப இன்மையில் இன்பத்தையும் துன்பத்தையும் மனிதன் தூய்க்க முடிகின்றது.

**கூடா நட்பில் மனம்**

நட்பு, நட்பாராய்தல், பழைமை, தீ நட்பு, கூடா நட்பு என ஐந்து அதிகாரங்களில் நல்ல நண்பர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டுவதன் அவசியத்தை மிக அழகாக விளக்கியுள்ளார்

திருவள்ளுவர் கூடா நட்பு என்ற அதிகாரத்தில் மனம் என்ற சொல்லை மூன்று இடங்களில் கையாண்டுள்ளார். சிலர் மிகுதியாக படித்திருப்பர். சிலர் படித்த படி நடக்க இயலாமல் தடுமாறுவர். அதனால கற்றவர்களோடு நட்புக் கொள்வதை விட பண்புடையவர்களோடு நட்பு கொள்ள வேண்டும் என்று வள்ளுவர் வலியுறுத்துகின்றார். பண்பு மனத்தின் அடிப்படையில் அமைகின்றது.

**'பல நல்ல கற்ற கடைத்தும் மனம் நல்லா**

**ஆகுதல் மாநாட்டு அரிது" (குறள் 823)**

பேச்சு பேசும் பேச்சை வைத்து மனிதர்களின் தரத்தை எடை போட முடியாது சொல்வது ஒன்று செய்வது ஒன்றாக சிலர் வாழ்வர் அவர்களோடு நட்பு கொள்ளக்கூடாது.

**'உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுவார்**

**உறவு கலவாமை வேண்டும். "**

என்கின்றார் வள்ளலார். இதனையே வள்ளுவர்,

**'மனத்தின் அமையாத வரை எனைத் தொன்றும்**

**சொல்லினார் தேறல்பாற்று அன்று " (குறள் 825)**

புறத்தோற்றத்தில் நல்லவர்கள் போன்று நடிக்கின்ற மக்களோடு தொடர்பு கொள்ளக்கூடாது பொதுமகளிர் போல அவர் வேறுபட்டு காணப்பெறுவர்.

**'இனம் போன்று இனம் அல்லார் கேண்மை மகளிர்**

**மனம் போல வேறுபடும்"(குறள் 822)**

**கூடா ஒழுக்கத்தில் மனம்**

மனிதர்கள் பலவகையினர். சிலர்; தனிமையில் செய்வதை பிறர் அறிய மாட்டார்கள் என்று கருதி சில செயல்களை செய்வர். இறை நம்பிக்கை உடையவர்களாக இருந்தாலும் இறைவன் மனிதர் செய்கின்ற செயல்கள் அனைத்தையும் உணர்வான் என்பதை அறிந்து இருந்தாலும் இறைவன் நம்மை என்ன செய்து விடுவார் என்றோ, ஒருவேளை ஏதேனும் செய்வதாக இருந்தாலும் பரிகாரம் செய்து தப்பித்துக் கொள்ளலாம் என்று எண்ணுவதுண்டு.

மனம் என்பது ஐம்பொறிகளான மெய், வாய் கண், மூக்கு செவி என ஐந்தையும் இயக்கும் கருவியாக அமைகின்றது. மனிதன் தவறு செய்யும் போது இந்த ஐம்பொறிகளும் நமக்கு மேலான ஆண்டான் நிலையில் இருக்கின்ற இவரே தவறு செய்கிறாரே என்று எள்ளி நகையாடி தமக்குள் போட்டிப் போட்டுக் கொண்டு சிரிக்கும்.

**'வஞ்சமனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்**

**ஐந்தும் அகத்தே நகும்" (குறள் 271)**

புறத்தூய்மை நீரான் அமையும் அகத்தூய்மை வாய்மையால் என்றுரைக்கும் வள்ளுவர் சிலரின் மன அழுக்கை வைத்துக்கொண்டு அதை மறைப்பதற்கு புறநீராடி துறவிகள் போல வாழ்வார் அதனால் பயனில்லை.

**'மனத்தது மாசாக மாண்டார் நீராடி**

**மறைந்தொழுகும் மாந்தர் பலர்" (குறள் 278)**

**உட்பகையில் மனம்**

நட்பு என்ற பெயரில் கூட இருந்து கொண்டே குழிப்பறிக்கிறான் என்பது வட்டார வழக்காக இருந்தாலும் இதனை முற்பகை என்பர். மனம் தெளிவாக இல்லாதவரோடு நட்பு கொண்டால் அது உட்பகையாக மாறி வருகின்றது துன்பங்கள் பல உண்டு அதனால் மனத்தெளிவில்லாதவர்களோடு நட்பு கொள்ளக்கூடாது என எச்சரிக்கின்றார் வள்ளுவர்

**மனமாணா உட்பகை தோன்றின் இனமாணா**

**ஏதும் பலவுந் தரும் (குறள் 884)**

**வரைவு மகளிரின் மனம்**

பொதுமகளிரான கணிகையரோடு தொடர்பு கொண்டால் வாழ்க்கை அழிந்து விடும் என்பதில் ஐயமில்லை. அத்தகைய பெண்டிரும,; சூ◌ெதாட்டம் கள்குடித்தல் யாவும் ஒரே வகையை சார்ந்தவை இவை யாவும் ஆடவரை அடிமை செய்யும். இவற்றுக்கு அடிமையாக பூண்டவர்கள் மீள்வது அரிது. இம்மூன்றும் செய்பவர்களோடு திருமகள் இணைய மாட்டாள். ஆதலால் செல்வத்தை விரும்புபவர்கள் இம்மூன்றையும் விலக்குவர் விலக்க வேண்டும் என்பது வள்ளுவரின் கண்டிப்பான தீர்வாகும்.

**'இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்**

**திரு நீக்கப்பட்டார் தொடர்பு" (குறள் 920)**

கொலைக் கருவியைக் கொண்டு விலங்குகளைக் கொலை செய்து புலால் உண்ணுகின்ற நெஞ்சம் நல்லதை செய்யாது என்பது வள்ளுவர் கருத்து அதேபோன்று புலால் உண்ணுகின்ற மனம் நல்லதை செய்யாது என்பது வள்ளுவர் கருத்து அதே போன்று புலால் புலால் உண்ணுகின்ற மனமும் நல்லதை நினைக்காது எல்லா செயல்களுக்கும்

அடிப்படை மனம் தான் மன உறுதியுடன் ஒருவன் இருந்தால் அவன் நினைத்தது அனைத்தையும் செய்து விட முடியும்.

'காட்டானை மேலெறி கடைத்தெருவே போகையிலே
நாட்டார் நலமறித்து நகைபுரியப் பார்ப்பரன்றோ
நாட்டார் நலமறித்து நகைபுரியப் பார்த்தாலும்
காட்டானை மேலெறி என்
கண்ணம்மா கண்ணு குளிரப் பாரேனோ"

என்ற சித்தர் பாடல் சித்தரிப்பதாக அமைந்துள்ளது.

**தொகுப்புரை:**

மனம், உள்ளம் நெஞ்சம் அகம் போன்ற சொற்கள் ஒரு பொருள் தருகின்ற பல சொற்கள் போன்று தோன்றினாலும் அவை வெவ்வேறு செயல்பாடுகளை உடையது. அம்மனம் தான் அனைத்திற்கும் அடிப்படை. வீட்டிற்கு வருகின்ற முதல் நிலை மின்சாரம் போன்றது. மனதில் இருந்து தோன்றுகின்றவை தான் உள்ளமும் நெஞ்சமும் வள்ளுவர் காமத்துப்பாலில் மனம் என்ற சொல்லில் பயன்படுத்தாதே நெஞ்சு என்ற சொல்லை மிகுதியாக பயன்படுத்துவதற்கு காரணம் இதுவே ஆகும். இன்பத்திற்கு நெஞ்சு தேவை, மனம் நெகிழ்வதால் நெஞ்சாகிறது மனம் அறத்திற்கு தேவை இதனை வள்ளுவர் மனதில் கொண்டு மனத்தை பொருளுக்கும் நெஞ்;ச இன்பத்திற்கும் கொண்டார் என்றே தோன்றுகின்றது மனமே வெற்றிக்கு வழிகோலுகிறது என்றால் மிகையாகாது.

**துணைநூற் பட்டியல்**

1.தெ.பொ.மீ. களஞ்சியம் - தெ.பொ.மீ - திருக்குறள் வள்ளுவர் கண்ட தத்துவம் பதிப்பகம் :காவ்யா பதிப்பகம் புத்தக வகை :தொழில்நுட்பம், பக்கங்கள் :524 பதிப்பு :1 -2012

2. திருக்குறள் ஞா மாணிக்கவாசகர் 18/171 .உமா பதிப்பகம். பவளக்காரத் தெரு. மண்ணடி சென்னை.600 001